# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.13 (LW 22 )

| **பெயர்** | நாகேந்திரன் | **தொழில்** | |
|---|---|---|---|
| **தகப்பனார் பெயர்** | சோனைபிள்ளை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **13.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பழைய வத்தலகுண்டு அருகில் மெக்கானிக் சாப் வைத்து வருகிறேன். 1ஆம் எதிரி அய்யனாரை தெரியும். அவர் எங்கள் ஊரில் உள்ள அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவர் தனது இருசக்கர வாகனத்தை என் கடையில் சர்வீசுக்குவிடுவார். கடந்த 13.07.2021 ஆம் தேதியன்று காலை 11.00 மணியளவில் தனது Hero pleasure இருசக்கர வாகனத்தை எனது கடைக்கு கொ்ண்டு வந்துவிட்டார். நான் 2 நாட்களில் சர்வீஸ் செய்து கொடுப்பதாக சொன்னேன். 1 வாரம் கழித்து அவரை கூப்பிட்டேன். அவர் வரவில்லை. 20.07.2021ஆம் தேதியன்று பாலகுரு போலீசாரும் 1ஆம் எதிரி அய்யனாரும் வந்து எனது மெக்கானிக் கடையில் இருந்து அவரது வாகனத்தை பெற்று சென்றார்கள். அவர்களுடன் மற்றொரு போலீசார் வந்திருந்தார். மேற்படி வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 57 BX 1764 சிவப்பு நிற வாகனம் ஆகும். அந்த வாகனத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும்.

**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 21 வருடமாக ஒர்க் சாப் வைத்துள்ளேன். ஒரு நாளைக்கு 10 வாகனங்கள் சர்வீஸ் செய்வேன். ஒரு மாதத்திற்கு நிறை வாடிக்கையாள்ர்களை சந்திப்பேன். எனது ஒர்க் சாப் வத்தலகுண்டு காவல் நிலையத்தில் இருந்து 100 மீட்டர்

துாரத்தில் இருக்கும். நான் சொல்வது போல் 13.07.2021 தேதி அன்று 1ஆம் எதிரி அவரது இருசக்கர வாகனத்தை என் கடையில் சர்வீஸ்க்கு விட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 20.07.2021ஆம் தேதி அன்ற போலீசார் அந்த வாகனத்தை 1ஆம் எதிரியுடன் வந்து கைப்பற்றி சென்றார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வத்தலகுண்டு காவல் நிலையத்திற்கு அருகில் கடை வைத்திருப்பதால் நான் அவர்களது கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:20:05 +0530

Additional District Judge,

Dindigul.